
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1060

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

43

# மொழிச் சிறுபான்மையினர் கல்வி உரிமையில் கழகம்!




தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

“புதிய கல்விக்கொள்கையில், அம்மாநில மொழியுடன், பொதுவான மொழியாக ஆங்கிலமும், மூன்றாவது மொழியாக அவர்கள் விரும்பிய மொழியைக் கற்கலாம் என்று கூறுகிறது. ஆனால், இங்கிருக்கும் திராவிட கட்சிகளோ மூன்றாவது மொழியாக ஒன்றை மாணவர்கள் கற்றுக்கொண்டு, தங்கள் திறனை வளர்த்துக்கொள்வதை தடுக்கிறது” என்ற வாதத்தை பா.ஜ.க. வைக்கிறது. ஆனால், ‘மூன்றாவது மொழி என்றால், அவர்கள் இந்தி கற்காத மாநிலங்களுக்கு இந்தியையும், இந்தி கற்ற மாநிலங்களுக்கு சமஸ்கிருதத்தையும் தூக்கி வருவார்கள். அது திறனை வளர்க்காது. தமிழை அழிக்கும், தமிழ்நாட்டின் தனித்துவ பண்பாட்டைச் சிதைக்கும்’ என்று நாம் எதிர்க்கிறோம். மற்றபடி யாரும் இந்தி படிக்கவே கூடாது என்பதல்ல நமது நிலைப்பாடு, எவரேனும் விரும்பினால், அவர்கள் தேவையை ஒட்டி கற்றுக்கொள்ள எண்ணற்ற வாய்ப்புகள் உள்ளன என்பதை கடந்த வாரமே குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால், ‘மும்மொழியாக இந்தி, சமஸ்கிருதம் வருவதைத்தான் திராவிடம் எதிர்க்கிறதே தவிர, ஏற்கெனவே வேறு சில மொழிகள் கற்றுத் தரப்படுகின்றன. இவர்களுக்கு இந்தி என்றால்தான் அலர்ஜி’ என்ற புதிய வாதத்தை அவர்கள் வைக்கிறார்கள். அதாவது, மொழிச் சிறுபான்மையினர், மதச் சிறுபான்மையினருக்கு அவர்கள் தாய்மொழிகளில் கற்றுத்தர வாய்ப்புகள் வழங்கப்பட்டிருப்பதைத்தான் இப்படிக் கூறுகிறார்கள். தமிழ்நாட்டில் தமிழர்களைப்போல திராவிட மொழிக்குடும்பத்தின் பிற மொழிகளைச் சார்ந்தவர்களும் சிறிய அளவில் வாழ்கின்றனர். அதேபோல உருதுவை தாய்மொழியாகக் கொண்ட இஸ்லாமியர்களும் உள்ளனர். அவர்களுக்கு, அவர்கள் சொந்த மொழியில் கற்பிப்பதை, மும்மொழிக் கொள்கை என்று சொல்வது எத்தனை அபத்தமானது?

### இடைநிற்றலைத் தடுக்கும் பணி

தமிழ்நாட்டில் தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக்கொள்கை நடைமுறையில் உள்ளது. இதற்காக, தமிழ் அல்லாமல் பிற மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட வெகு சிலர் பாதிக்கப்பட்டு, கல்வியில் இருந்து வெளியேறிவிடக் கூடாது என்ற நோக்கத்துடன் மொழிச் சிறுபான்மையினருக்கு, அவரவர் தாய்மொழியில் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. குறிப்பாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தின் ஓசூர் பகுதி கர்நாடகம், ஆந்திரம் என இரண்டு மாநில எல்லைகள் சந்திக்கும் பகுதி. இதனால், அப்பகுதியில் தெலுங்கு, கன்னடம் பேசும் மக்களும் பெருமளவு கலந்துள்ளனர். அவர்களுக்கு தாய்மொழியே தெலுங்கும், கன்னடமும்தான். எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 85 தெலுங்கு, 10 கன்னடம், 32 உருது தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன.

2006-இல் கழக அரசு தமிழைக் கட்டாயப்பாடம் ஆக்கியபோது, தமிழ்நாடு எல்லைக்குள் அரசுப் பள்ளிகளில் படிக்கிற எல்லோருக்கும், தமிழ் கட்டாயப்பாடம் ஆனது. இதைத்தான் ‘சங் பரிவார்கள்’ மும்மொழிக் கொள்கை என்று மடைமாற்றுகிறார்கள். அதேபோல, ஈரோடு மாவட்டத்தில் சத்தியமங்கலம், அந்தியூர், தாளவாடி, கடம்பூர், ஆசனூர் உட்பட பல மலைப்பகுதிகள் கர்நாடக மாநிலத்தை ஒட்டியுள்ளன. இதனால், அங்கு கன்னடம் பேசுவோர் அதிகம் உள்ளனர். தமிழ் மட்டுமே அங்கு கட்டாயப்பாடமாக இருந்தவரை இடைநிற்றலும், மாணவர் சேர்க்கையும் அதிகமாக இருந்தது. இதைத் தடுத்து அவர்களுக்கும் கல்வி புகட்டும் நோக்கில், நீதிமன்ற உத்தரவுடன் அங்கு 40 அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் கன்னடம் மொழி படமாக்கப்பட்டுள்ளது.

> தமிழ்நாடு முழுவதும் தேவைப்படும் இடங்களில் மொழிச்சிறுபான்மையினர் கல்வி நலனைக் கருத்தில்கொண்டு, அவர்களுக்கு தங்கள் தாய்மொழியில் பாடம் கற்றுத்தரப்படுகிறது.

வேலூர் மாவட்டத்தில் இரண்டு பள்ளிகளில் தமிழ், ஆங்கிலத்துடன் தெலுங்கும் கற்றுத்தரப்படுகிறது. இஸ்லாமியர்கள் அதிகம் வசிக்கும் பகுதி என்பதால், 124 உருது பள்ளிகள் செயல்படுகின்றன. ஆந்திர எல்லையை ஒட்டிய பகுதியில், 11 தெலுங்கு பள்ளிகள் உள்ளன. தருமபுரி மாவட்டத்தில் அதியமான் அரசு மேல்நிலைப்பள்ளியில் உருது மொழிப்பாடமாக உள்ளது. சேலத்தில் அரசு உருது தொடக்கப்பள்ளிகள் 2 உள்ளன. கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி அருகே பள்ளப்பட்டியில், ‘உஸ்வதுான் ஹசானா ஓரியண்டல் அரபி’ அரசு உதவி பெறும் மேல்நிலை பள்ளியில் அரபி, ஆங்கிலம், தமிழ் என மும்மொழி கற்பிக்கப்படுகிறது. இதில், அரபி, ஆங்கில மொழிகளை கட்டாயம் படிக்க வேண்டும். விருப்பப் பாடமாக தமிழ் கற்பிக்கப்படுகிறது. அதுபோல, சிந்தாமணிப்பட்டியில் தாருல் உலூம் சவுதியா அரசுப் பள்ளியில் ஆங்கிலம், தமிழ், அரபி கற்பிக்கப்படுகிறது. இங்கு தமிழ், ஆங்கிலம் கட்டாயப் பாடமாகும். அரபி மொழி, விருப்பப் பாடமாகும்.

### தேவை கருதிய திட்டங்கள்

இப்படி தமிழ்நாடு முழுவதும் தேவைப்படும் இடங்களில் மொழிச்சிறுபான்மையினர் கல்வி நலனைக் கருத்தில்கொண்டு, அவர்களுக்கு தங்கள் தாய்மொழியில் பாடம் கற்றுத்தரப்படுகிறது. அதற்காக தரமான குழுவினரைக் கொண்டு, அவர்கள் தாய்மொழியில் பாடப்புத்தகங்கள் மொழிபெயர்க்கப்படுகின்றன. குறிப்பாக, தமிழ்நாட்டில் தெலுங்கு வழியில் பயிலும் மாணவர்கள் சுமார் பத்தாயிரம் பேர் உள்ளனர். தெலுங்கு மொழி பாடத்திட்டத்தைத் தரமாக தயார் செய்து, அவர்களின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில், ஓசூரில் அதியமான் பொறியியல் கல்லூரி வளாகத்தில் 2 தலைமையாசிரியர்கள், 3 தெலுங்கு மொழி ஆசிரியர்கள் மற்றும் 46 ஆசிரியர்கள் கொண்ட குழுவைக்கொண்டு, கணிதம், வேதியியல், இயற்பியல், தாவரவியல், வணிகவியல், வரலாறு, கணக்குப் பதிவியல், பொருளாதாரம், அரசியல், வரலாறு போன்ற 11 பாடங்களைத் தயாரித்துள்ளது திராவிட மாடல் அரசு.

இதன்மூலம், ஆந்திர மாநிலத்தில் உள்ள குப்பம், திருப்பதி, சித்தூர், நகரி மற்றும் கர்நாடக மாநிலம் பெங்களூரு பகுதிகளில் உள்ள தெலுங்கு மொழியில் கற்பிக்கும் கல்லூரிகளில் இம்மாணவர்கள் சேர்ந்து உயர்கல்வி பெறுவதற்காக கதவுகளைத் திறந்திருக்கிறது திராவிட மாடல் அரசு. ஆனால், இந்தியும், சமஸ்கிருதமும் படிப்பதால், யாருக்கு உயர் கல்வி வாய்ப்போ, உரிய வேலைவாய்ப்போ கிடைக்கப்போகிறது? இந்தி பேசும் மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு சாரை சாரையாக வரும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கே வேலைவாய்ப்பை உருவாக்காத அவர்கள், தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்பதற்காக மொழிச்சிறுபான்மையினரின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு வழங்கும் தாய்மொழிக் கல்வியை, கேள்வி கேட்பதற்கே தார்மீக உரிமையற்றவர்கள்.

...நீளும்

## மத நல்லிணக்கத்துக்கு ஊறு விளைவிக்கலாமா?

திருப்பரங்குன்றத்தில், கோயில் வழக்கப்படி தீபம் ஏற்றியதை ஏற்றுக்கொள்ளாமல், இஸ்லாமியர்களின் வழிபாட்டுத் தலத்திற்கு அருகில்தான் தீபம் ஏற்ற வேண்டுமென்று, கலவரத்தைத் தூண்ட முயற்சித்த பா.ஜ.க.வின் நோக்கத்தைத் தவிடுபொடியாக்கி இருக்கிறது திராவிட மாடல் அரசு. இத்தகைய கலவர முயற்சிகளுக்கு அனுமதித்தால், அவர்கள் தமிழ்நாட்டை எங்கே கொண்டு வந்து நிறுத்துவார்கள் என்பதற்கான சாட்சியங்களாக பல வட மாநிலங்கள் நம் கண்முன்னே உள்ளன.

குறிப்பாக, தமிழ்நாட்டில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டங்களில் இந்துக்களும், இஸ்லாமியர்களும் பங்கேற்பது நல்லிணக்க அடையாளம். ஆனால், வடநாட்டிலோ கிறிஸ்துமஸ் கொண்டாடுவதே தேசத்துரோக குற்றம் போல சித்திரிக்கும் மனப்போக்கை, சங் பரிவார்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆட்சியைக் கைப்பற்றி ஓராண்டே ஆகியுள்ள ஒடிசாவிலும் இத்தகைய பாகுபாடு காட்டும் மனநிலையை வளர்த்துவிட்டார்கள் என்பதை, அங்கிருந்து வரும் செய்திகள் வெளிப்படுத்துகின்றன.

உதாரணமாக, ஒடிசா மாநிலத்தில் சாலையோர வியாபாரி ஒருவர், கிறிஸ்துமஸை ஒட்டி, கிறிஸ்துமஸ் தாத்தா உடை மற்றும் தொப்பிகளை விற்பனை செய்துள்ளார். அவரை மிரட்டிய சில மதவாத கும்பல், ‘இந்து ராஷ்டிரத்தில் கிறிஸ்துமஸ் பொருட்களை விற்பனை செய்யக்கூடாது’ என மிரட்டியுள்ளனர்.

இந்தியாவின் பன்முகத்தன்மைக்கும், மத நல்லிணக்கத்துக்கும் அச்சுறுத்தல் விளைவிக்கும் இந்தப் போக்கைத்தான் தமிழ்நாட்டிலும் உருவாக்க, திருப்பரங்குன்றத்தில் கை வைத்திருக்கிறார்கள். மத நல்லிணக்கத்துக்கு ஊறு விளைவிக்கும் இத்தகைய முயற்சிகளை தமிழ்நாடு ஒருபோதும் ஏற்காது, எதிர்த்து முறியடிக்கும்.

## ஃப்ளாஷ்பேக்

### தலைவர் சூட்டிய பெயர்!



1980-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் பழைய சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் இருந்த கழக அலுவலகத்தில் சந்தித்து, தேர்தல் நிதி வழங்கினேன். அப்போது, அங்கிருந்த ஒரு புகைப்பட நிபுணரை அழைக்கச் செய்து, என்னை அருகில் நிற்க வைத்து, புகைப்படம் எடுக்க வைத்தார். நான் அப்போது பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் (இன்றைய மாநகர போக்குவரத்துக் கழகத்தில்) இளநிலை உதவியாளராகப் பணியில் இருந்தேன். தலைவர் அவர்கள் “நீ பி.டி.சி.-யில் வேலை செய்துகொண்டே தேர்தல் நிதி வசூல் செய்து கொடுக்கிறாயா? என்று கேட்டு “பி.டி.சி. பாலு கொடுத்த தேர்தல் நிதி” என்று நான் பணம் வைத்துக் கொடுத்த கவரில் “பி.டி.சி பாலு அளித்த நிதி” என்று எழுதி கொடுத்தார். அன்றுமுதல் நான் ‘பி.டி.சி. பாலு’ என்றே அழைக்கப்பட்டு வருகிறேன். அதன்பிறகு. பல புகைப்படங்கள் தலைவருடன் எடுத்துக்கொண்டாலும், என் வாழ்வில் மறக்க முடியாத புகைப்படமாக, இன்றும் நான் பாதுகாத்து வருகிறேன்.



பி.டி.சி.(வெ) பாலு

– பி.டி.சி.(வெ) பாலு, மாநில தொழிலாளர் அணி துணைச் செயலாளர், அண்ணா நகர், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### சென்னை விழாக்கோலம்!

1966-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 29-ஆம் தேதி, நான்காவது மாநில மாநாடு விருகம்பாக்கத்தில் தொடங்கியது. இரண்டு நாட்கள் முன்னதாகவே, சென்னைக்கு வருகின்ற பேருந்துகள், ரயில்கள் அத்தனையிலும் மக்கள் வெள்ளம்; வாழைமரம், மாவிலைத் தோரணங்கள், கருப்பு சிவப்புக் கொடி என அலங்காரம் கண்டிருந்தன. நகரெங்கும் அலங்கார வளைவுகள், வரவேற்புப் பதாகைகள் என சென்னை விழாக்கோலம் பூண்டது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.